# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,508 – 1965 සැප්තැම්බර් 17 වැනි සිකුරාදා – 1965 9 17

14,508 ம் இலக்கம் –1965 ம் ஆண்டு செப்தெம்பர் மாதம் 17 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி IV — உள்ளூர் ஆட்சி

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| உள்ளூராட்சி அறிவிப்புகள் .. .. | 119 | வரவு செலவுக் கூற்றுக்கள் .. .. | — |
| பதவிகள்—வெறறிடம் .. .. .. | — | வரவு செலவுத் திட்டங்கள் .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும், பிறவும் .. | — | ஆதன விறபனைகள் .. .. .. | — |
| துணை விதிகள் .. .. .. | 121 | விதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் .. .. | — |
| உள்ளூராட்சி அதிகார நிலையத் தேர்தற் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் .. .. | — | நானாவிதம் .. .. .. | 122 |


கவனிக்க.—1963 சனவரி முதல் யூன் வரையுள்ள காலத்திற்கு இலங்கை அரசாங்க வர்த்தமானியின் அட்டவணை இலக்கங்கள் 13,457 தொடக்கம் 13,690 வரை அனுபந்தமாக இந்த இதழில் கொடுக்கப்பட்டுள்ளது.

## உள்ளூராட்சி அறிவிப்புகள்

ඇල්. ජී.—ඞී. 67/36

### கல்முனைப் பட்டினச் சபை

#### பொது அரங்காட்டுகள் கட்டளைச்சட்டம்

(176 ஆம் அத்தியாயமான) பொது அரங்காட்டுகள் கட்டளைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவால் தமக்குரித்தாக்கப்பட்ட அதிகார பலத்தைக்கொண்டு உள்ளூராட்சி அமைச்சரால் ஆக்கப்பட்ட விதி.

கொழும்பு,
1965 ம் ஆண்டு ஆகஸ்ட் மீ 25 ந் உ.

மு. திருச்செல்வம்,
உள்ளூராட்சி அமைச்சர்.

#### விதி

(176 ஆம் அத்தியாயமான) பொது அரங்காட்டுகள் கட்டளைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்டு, 1919, ஏப்பிறல் 4 ம் தேதிய 7,004 ஆம் இலக்கக் கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட 1953, ஏப்பிறல் 9 ம் தேதிய 9,108 ஆம் இலக்க கசெற்றில் பிரசுரமான விதியால் கடைசியாகத் திருத்தப்பட்டபடியான விதிகள் கல்முனைப் பட்டின சபையின் நிருவாக எல்லைகளுக்குள்ளிருக்கும் பிரதேசம் சம்பந்தப்பட்டவரை, அதன் அ3 விதியின் கண் குறிக்கப்பட்டுள்ள கட்டண அளவுத்திட்டத்திற்குப் பதிலாகக் கீழ்க்காணும் புதிய அளவுத் திட்டத்தை இடுவதன்மூலம், இத்தால் மேலும் திருத்தப்படுகின்றன :—

| | ஒன்பது தினங்களுக்கு மேற்படாத காலத்துக்கு | ஒன்பது தினங்களுக்கு மேற்பட்ட ஆனல் ஒரு மாதத்துக்கு மேற்படாத காலத்துக்கு ரூ. ச. | | ஒரு மாதத்துக்கு மேற்பட்ட ஆனல் ஆறு மாதங்களுக்கு மேற்படாத காலத்துக்கு | ஆறு மாதத்துக்கு மேற்பட்ட ஆனல் பத்து மாதங்களுக்கு மேற்படாத காலத்துக்கு ரூ. ச. | | பத்து மாதத்துக்கு மேற்பட்ட ஆனல் ஒரு வருடத்துக்கு மேற்படாத காலத்துக்கு ரூ. ச. |
|---|---|---|---|---|---|---|---|
| இருக்கை வசதி ஏற்படுத்தப்பட்டுள்ள ஆட்களின் எண்ணிக்கை 300 க்கு மேற்படாதிருப்பின் | தினமொன்றுக்கு ரூ. 3 வீதம் கணிக்கப்பட்ட ஒரு கட்டணம் | 25 0 | .. | மாதமொன்றுக்கு அல்லது அதன் பாகத்துக்கு ரூ. 25/- வீதம் கணிக்கப்பட்ட ஒரு கட்டணம் | 150 0 | .. | 250 0 |
| இருக்கை வசதி ஏற்படுத்தப்பட்டுள்ள ஆட்களின் எண்ணிக்கை 300 க்கு அதிகமாகவும் 500 க்கு மேற்படாமலுமிருப்பின் | தினமொன்றுக்கு ரூ. 5/- வீதம் கணிக்கப்பட்ட ஒரு கட்டணம் | 50 0 | .. | மாதமொன்றுக்கு அல்லது அதன் பாகத்துக்கு ரூ. 50/- வீதம் கணிக்கப்பட்ட ஒரு கட்டணம் | 250 0 | .. | 400 0 |
| இருக்கை வசதி ஏற்படுத்தப்பட்டுள்ள ஆட்களின் எண்ணிக்கை 500 க்கு அதிகமாயிருப்பின் | தினமொன்றுக்கு ரூ. 10/- வீதம் கணிக்கப்பட்ட ஒரு கட்டணம் | 100 0 | .. | மாதமொன்றுக்கு அல்லது அதன் பாகத்துக்கு ரூ. 100/- வீதம் கணிக்கப்பட்ட ஒரு கட்டணம் | 400 0 | .. | 500 0 |

9-807—17.9.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,508

## சாவகச்சேரி பட்டினசபை

### பொது அரங்காட்டுகள் கட்டளைச் சட்டம்

(176 ஆம் அத்தியாயமான) பொது அரங்காட்டுகள் கட்டளைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவால் அவருக்கு உரித்தாக்கப்பட்ட அதிகார பலத்தைக்கொண்டு, உள்ளூராட்சி அமைச்சரால் ஆக்கப்பட்ட விதி.

கொழும்பு,
1965 ம் ஆடு ஆகஸ்ட் மீ 3 ந் உ.

மு. திருச்செல்வம்,
உள்ளூராட்சி அமைச்சர்.

### விதி

(176 ஆம் அத்தியாயமான) பொது அரங்காட்டுகள் கட்டளைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்டு 1943, ஏப்றில் 9 இற் 9,018 ம் இலக்கக் கசெற்றில் பிரசுரமான விதியால் கடைசியாகத்திருத்தப்பட்டபடியான 1919, ஏப்பிறல் 4 இன் 7,004 ஆம் இலக்க கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட விதிகள், சாவகச்சேரி நகரசபையின் நிருவாக எல்லைகளுக்குள்ளிருக்கும் பிரதேசத்துக்கு அவை சம்பந்தப்படுமளவுக்கு, அவற்றின் விதி ஏ 3 இல் குறித்துள்ள கட்டண விகிதத்துக்குப் பதிலாகக் கீழ்க்காணும் புதிய கட்டண விகிதத்தை இடுவதன் மூலம், இத்தால் மேலும் திருத்தப்படுகின்றன :—

| | நாள் ஒன்றுக்கு ரூ. ச. | | மாதம் ஒன்றுக்கு ரூ. ச. | | (டிசெம்பர் 31 இல் முடியும்) வருடம் ஒன்றுக்கு ரூ. ச. |
|---|---|---|---|---|---|
| ஆசன வசதி செய்யப்பட்டிருப்போரின் எண்ணிக்கை 199 க்கு மேற்படாதிருப்பின் .. | 2 50 | .. | 20 0 | .. | 150 0 |
| ஆசன வசதி செய்யப்பட்டிருப்போரின் எண்ணிக்கை 199 க்கு மேற்பட்டும் 399 க்கு மேற் படாதுமிருப்பின் .. .. .. .. | 3 50 | .. | 35 0 | .. | 200 0 |
| ஆசன வசதி செய்யப்பட்டிருப்போரின் எண்ணிக்கை 399 க்கு மேற்பட்டிருப்பின் .. | 6 0 | .. | 50 0 | .. | 400 0 |

9–805—17.9.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,508.

---

## நாவலப்பிட்டி நகர சபை

### பொது அரங்காட்டுகள் கட்டளைச் சட்டம்

(176 ஆம் அத்தியாயமான) பொது அரங்காட்டுகள் கட்டளைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவால் அவருக்கு உரித்தாக்கப்பட்ட அதிகாரபலத்தைக்கொண்டு உள்ளூராட்சி அமைச்சரால் ஆக்கப்பட்ட விதி.

மு. திருச்செல்வம்,
உள்ளூராட்சி அமைச்சர்.

கொழும்பு, 1965 ம் ஆடு ஒகஸ்ட் மீ 25 ந் உ.

### விதி

(176 ம் அத்தியாயமான) பொது அரங்காட்டுகள் கட்டளைச்சட்டத்தின் 3 ம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்டு 1943, ஏப்பிறல் 9 இன் 9,108 ஆம் இலக்க கசெற்றில் பிரசிரமான விதியால் கடைசியாகத் திருத்தப்பட்டபடியான, 1919, ஏப்பிறல் 4 இன் 7,004 ஆம் இலக்க கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட, விதிகள், நாவலப்பிட்டி நகர சபையின் நிருவாக எல்லைகளுக்குளிருக்கும் பிரதேசத்துக்கு அவ்விதிகள் சம்பந்தமுடையனவாயிருக்குமளவுக்கு, அவற்றின் விதி அ 3 இல் குறித்துள்ள கட்டணங்களின் அளவுத்திட்டத்திற்குப்பதிலாக கீழ்க்காணும் புதிய அளவுத்திட்டத்தை இடுவதன் மூலம், இத்தால், மேலும் திருத்தப்படுகின்றன :—

| | நாள் ஒன்றுக்கு ரூ. ச. | | மாதம் ஒன்றுக்கு ரூ. ச. | | (டிசெம்பர் 31 ம் முடிவுறும்) வருடம் ஒன்றுக்கு ரூ. ச. |
|---|---|---|---|---|---|
| இருக்கை வசதி ஏற்படுத்தப்பட்டுள்ள ஆட்களின் எண்ணிக்கை 199 க்கு மேற்படாதிருப்பின் | 5 0 | .. | 50 0 | .. | 300 0 |
| இருக்கை வசதி ஏற்படுத்தப்பட்டுள்ள ஆட்களின் எண்ணிக்கை 199 க்கு அதிகமாகவும் 399 க்கு மேற்படாமலும் இருப்பின் | 10 0 | .. | 100 0 | .. | 400 0 |
| இருக்கை வசதி ஏற்படுத்தப்பட்டுள்ள ஆட்களின் எண்ணிக்கை 399 க்கு அதிகமாயிருப்பின் | 15 0 | .. | 150 0 | .. | 500 0 |

1948, ஜுன் 4 இன் 9,873 ஆம் இலக்க கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட நாவலப்பிட்டி நகர சபைக்கு பொருந்துகின்றபடியான விதியைப்பற்றிய அறிவித்தல் இத்தால் நீக்கஞ் செய்யப்படுகிறது.

9–809—17.9.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,508

---

LDB 39/50

## மானிப்பாய் பட்டினச் சபை

### பட்டினச் சபைகள் கட்டளைச் சட்டம்

மானிப்பாய் பட்டினச் சபையால் (256 ஆம் அத்தியாயமான), பட்டினச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 152 ஆம், 156 ஆம் பிரிவுகளின் கீழ், ஆக்கப்பட்டு, உள்ளூராட்சி அமைச்சரால், அக்கட்டளைச் சட்டத்தின் 153 ஆம் பிரிவால் அவருக்கு உரித்தாக்கப்பட்ட அதிகார பலத்தைக்கொண்டு, அங்கீகரிக்கப்பட்ட துணைவிதி.

ஸ. ஈ. கொகர்லி மொரகொட,
நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு,
1965 ம் ஆடு ஆகஸ்ட் மீ 25 ந் உ.

### வாகன, மிருக வரி பற்றிய துணைவிதி

1946, ஒக்டோபர் 4 ந் தேதிய 9,609 ஆம் இலக்க கசெற்றிற் பிரசுரிக்கப்பட்ட விதிகளின் 211 ஆம் விதியின்கீழ் கொடுக்கப்படுமாறு வேண்டப்பட்டுள்ள அட்டவணை அவ்விதிகள் மானிப்பாய் பட்டினச் சபைக்கு ஏற்புடையனவாயிருக்குமளவில், கொடுக்கப்படவேண்டியதாயிருக்காது.

9-806—17.9.65 ந் திகதிய வர்த்தமானி இல, 14,508

## நீர்கொழும்பு மாநகர சபை

**கசாப்புக்காரரின் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 272—1956 இன் மாற்றுப் பதிப்பு) 17 ஆம் தொகுதியின் கீழ் உள்ள கட்டளை**

கசாப்புக்காரரின் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 272–1956 ம் ஆண்டின் மாற்றுப் பதிப்பு) 17 ம் தொகுதியின் படி, நீர்கொழும்பு மாநகர சபையின் அதிகாரத்தின் கீழ் உள்ள அதன் எல்லைக்குள், கீழ் காணும் தினத்தில் மிருகங்கள் வெட்டுவதையோ, மிருகங்களின் இறைச்சி விற்பனை செய்வதையோ தடைசெய்யப்பட்டிருப்பதாக இத்தால் அறிவிக்கிறேன்.

1965 ஐப்பசி மீ 2 ம் திகதி (மிருக தினம்)

ஏ. வி. சின்னையா,
நகரசபை ஆணையாளர்.

மாநகரசபைக் காரியாலயம்,
நீர்கொழும்பு,
3.9.1965.

9–831—17.9.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,508

---

## கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

**17 ஆம் பிரிவின்படியான அறிவித்தல்**

1961 ஆம் ஆண்டின் 60 ஆம் இலக்கக் கிராமச் சபைகள் (திருத்தச்) சட்டத்தால் திருத்தப்பட்ட கிராமச் சபைகள் கட்டளைச்சட்டத்தின் (அத்தியாயம் 257) 17 (5) ஆம் பிரிவால் எனக்களிக்கப்பட்ட அதிகார பலத்தைக் கொண்டு அந்தோனி அல்பிரட் யோசேப், உள்ளூராட்சி உதவி அதிகாரி, கிழக்குப் பிரதேசம் (கீழ்), மட்டக்களப்பு, ஆகிய நான், அம்பாறை மாவட்டத்திலுள்ள அக்கரைப்பற்று மத்திய கிராமச் சபைக்குத் தலைவர் ஒருவரைத் தெரிவுசெய்வதற்காக அச்சபையின் கூட்டமொன்றை 1965 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 27 ஆம் திகதி முற்பகல் 10·30 மணிக்கு அக்கரைப்பற்று மத்திய கிராமச் சபை அலுவலகத்தில் கூட்டுகிறேன்.

அ. அ. யோசேப்,
உள்ளூராட்சி உதவி அதிகாரி,
கிழக்குப் பிரதேசம் (கீழ்).

உள்ளூராட்சித் திணைக்களம்,
கிழக்குப் பிரதேசம் (கீழ்),
மட்டக்களப்பு, செப்டம்பர் 11, 1965.

9–839—17.9.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,508

---

# துணை விதிகள்

## சாவகச்சேரி நகர சபை

**நகர சபைக் கட்டளைச் சட்டம்**

(255 அத்தியாயமான) நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 153 (1), 157 ஆகிய பிரிவுகளின் கீழ் சாவகச்சேரி நகரசபையால் ஆக்கப்பட்டு உள்ளூராட்சி அமைச்சருக்கு அக் கட்டளைச் சட்டத்தின் 154 (1) ம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்தின்படி அவரால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதி.

ஏ. ஈ. கொகர்லி மொரகொட,
நிரந்தர செயலாளர், உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு, 1965 ம் ஆண்டு ஒகஸ்ட் மீ 25 ந உ.

**துணைவிதி**

1953 ம் ஆண்டு ஜனவரி மாதம் 23 ந் தேதிய 10,496 ம் இலக்கக் கசெற்றிற் பிரசுரிக்கப்பட்ட துணைவிதியினுல் திருத்தப்பட்டபடியான, 1949 ம் ஆண்டு செபரம்பர் மாதம் 16 ந் தேதிய 10,016 ம் இலக்கக் கசெற்றிற் பிரசுரிக்கப்பட்ட துணைவிதிகள், 243 ம் துணைவிதிக்குப் பதிலாகப் பின்வரும் புதிய துணைவிதியைச் சேர்த்தல் மூலம் இதனுல் திருத்தப்படுகின்றன :—

“ 243 (1) பொதுச் சந்தையிலுள்ள ஆசனம் அல்லது இடம் எதனையாவது உபயோகிப்பதற்கு, பின்வரும் வீதங்களின் படி கட்டணமொன்று விதிக்கப்பட்டுக் கொடுபடுதல் வேண்டும் :—

| | ரூ. ச. |
|---|---|
| (அ) 4 அடி நீளம் 4 அடி அகலத்துக்கு மேற்படாத திறந்த இடத்துக்கு .. .. .. | 25 |
| (ஆ) 6 அடி நீளம் 6 அடி அகலத்திற்கு மேற்படாத திறந்த இடத்துக்கு .. .. .. | 35 |
| (இ) 36 சதுர அடிக்கு மேல் 60 சதுர அடிக்கு மேற்படாத திறந்த இடத்துக்கு .. .. .. | 50 |
| (ஈ) 60 சதுர அடிக்கு மேல் 100 சதுர அடிக்கு மேற்படாத திறந்த இடத்துக்கு .. .. .. | 65 |
| (உ) 10 அடி நீளம் 10 அடி அகலத்துக்கு மேற்படாத மூடப்பட்ட இடத்துக்கு .. .. .. | 1 50 |
| (ஊ) மேலதிக ஒவ்வொரு 100 சதுர அடிக்கும் அதன் பகுதிக்கும் .. .. .. | 1 0 |
| (எ) மீன் சந்தைக் கட்டடத்திற்குள் 4 அடி நீளம் 4 அடி அகலம் கொண்ட மூடப்பட்ட இடத்துக்கு.. .. | 50 |
| (ஏ) 16 சதுர அடிக்கு மேல் 36 சதுர அடிக்கு மேற்படாத மூடப்பட்ட இடத்துக்கு .. .. .. | 1 0 |
| (ஐ) 36 சதுர அடிக்கு மேல் 60 சதுர அடிக்கு மேற்படாத மூடப்பட்ட இடத்துக்கு .. .. .. | 1 50 |
| (ஒ) 60 சதுர அடிக்கு மேல் 100 சதுர அடிக்கு மேற்படாத மூடப்பட்ட இடத்துக்கு .. .. .. | 2 0 |
| (ஓ) மேலதிக ஒவ்வொரு 25 சதுர அடிக்கும் அல்லது அதன் பகுதிக்கும் .. .. .. | 25 |

(2) பொதுச் சந்தையில் விற்பனவு செய்வதற்காகக் கொண்டுவரப்படும் பொருள்கள் சம்பந்தமாகப் பின்வரும வீதங்களின்படி கட்டணம் ஒன்று விதிக்கப்பட்டு வாசலிற் கொடுபடுதல் வேண்டும் :—

| | |
|---|---|
| (அ) பொருள்கள் உள்ள 3 அடி நீளம் 2 அடி அகலமான சாக்கிற்கு .. .. .. | 25 |
| (ஆ) 6 சதுர அடிக்கு மேல் 8 சதுர அடிக்குட்பட்ட சாக்குகள்.. | 35 |
| (இ) ஓலை அல்லது நாரால் இழைக்கப்பட்ட பெரிய கடகத்துக்கு | 15 |
| நடுத்தரமான கடகத்துக்கு .. .. | 10 |
| சிறிய கடகத்துக்கு .. .. .. | 05 |
| (ஈ) பறவைகள் (கோழி பேடு முதலியன) ஒவ்வொன்றுக்கும் .. | 10 |
| (உ) மிருகங்கள் : | |
| (1) ஆடும் செம்மறி ஆடும் .. .. | 50 |
| (2) மாடு .. .. .. | 1 0 |
| (3) பன்றி, அல்லது காட்டுப்பன்றி .. .. | 3 0 |
| (4) மான் .. .. .. | 3 0 |
| (5) மரை .. .. .. | 3 0 |
| (6) முயல் .. .. .. | 15 |
| (7) உடும்பு .. .. .. | 15” |

9–810—17.9.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,508

## பண்டாரவளை நகரசபை

### நகரசபைகள் கட்டளைச் சட்டம்

(255 ஆம் அத்தியாயமான) நகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் 130 (ஆ), 153 என்னும் பிரிவுகளின் கீழ் பண்டாரவளை நகரசபையால் ஆக்கப்பட்டு, அக்கட்டளைச் சட்டத்தின் 154 ஆம் பிரிவால் தமக்கு உரித்தாக்கப்பட்ட அதிகார பலத்தைக்கொண்டு உள்ளூராட்சி அமைச்சரால் அங்கீகரிக்கப் பட்ட துணைவிதி.

ஏ. ஈ. கெ கர்லி மொரகொட,
நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு,
1965 ம் ஆண்டு ஆகஸ்ட் மீ 25 ந் உ.

### துணைவிதி

இதற்குள்ள அட்டவணையில் விவரிக்கப்படும் வளவுகள், (255 ஆம் அத்தியாயமான) நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 130 (ஆ) என்னும் பிரிவின் கீழ் விதித்து அறவிடப்படுவதும், 8.6.1965 ந் தேதிய அறிவித்தலில் சொல்லப்படுவதும், 1965, ஜூன் 18 இன் 14,427 ஆம் இலக்க கசெற்றில் பிரசுரிக்கப்பட்டதுமான 1965 ஆம் ஆண்டுக்கான விசேட நீர்வரியிலிருந்து விலக்களிக்கப்படும்—

### அட்டவணை

கீழ்க்காணும் வரிமதிப்பு இலக்கங்களைக் கொண்ட வளவுகள்—

**வட்டாரம் இல. 1**

பன்சாலை தெரு : இல. 50/1.

பூனகலை தெரு : இலக்கங்கள் 45/1, 45/2, 45/3, 45/4, 45/7 ம், 8 ம், 45/9, 45/10, 55, 55/2, 55/3, 55/4, 55/5, 55/6, 55/8, 55/10.

**வட்டாரம் இல. 3**

பன்சாலைபாதை : இலக்கங்கள் 17, 17/1, 17/2, 23, 23/1, 25, 6.

**வட்டாரம் இல. 4**

வெலிமடை தெரு : இலக்கங்கள் 39/1, 41, 41/1, 41/2, 41/3, 41/4, 45, 45/4, 55.

எத்தம்பிட்டித் தெரு : இலக்கங்கள் 10, 10/1, 10/2, 10/3, 16, 24, 24/1, 24/2, 24/3, 24/4, 28, 30, 30/1, 32, 34, 36.

**வட்டாரம் இல. 6**

மேல்போக்கு தெரு : இல. 48.

9–801— 17.9.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,503

# நானாவிதம்

## தலைமன்னார்க் கிராமச் சபை

### இறைச்சிக்காரர் பற்றி சட்ட அறிவித்தல்

இறைச்சிக்காரர் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 272) 7 ஆம் பிரிவின் தாற்பரியப்படி, இதன்கீழ் காணப்படும் அட்டவணையில் காண்பவரிட மிருந்து 1965 ஆம் ஆண்டிற்கு புச்சர் லைசென்ஸ் தரும்படி விண்ணப்பம் கிடைத்துள்ளது.

இந்தக் கிராமச்சபை இடப்பரப்பில் வசிப்போர் எவரேனும் லைசென்ஸ் கொடுப்பதை மறுக்க விரும்பினுல் மறுப்புக்கான காரணங்களை இவ் வறிவித்தல் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து 14 நாட்களுக்கு முன்னதாக இணைப்பிரதிகளாய் எனக்கு அனுப்பிவைக்குமாறு தயவுடன் கேட்டுக் கொள்ளுகிறேன்.

### அட்டவணை

விண்ணப்பக்காரரின் பெயர் :— மீராசாகிபு முகம்மதுத்தம்பி

விலாசம் :— 1 ஆம் வட்டாரம், தலைமன்னார் கி. ச.

வியாபாரம் செய்யும் இடம் :— மாட்டிறைச்சிக்கடை, புகையிரத நிலையத்தடி, தலைமன்னார்.

எஸ். வி. பீரிஸ்,
தலைவர், கி. ச. தலைமன்னார்.

கிராமச்சபைக் காரியாலயம்,
தலைமன்னார்,
6.9.65.

9–816— 17.9.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,503

வெள்ளிக்கிழமை தோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

வெளியாவதற்கு நான்கு வேலை நாட்களுக்கு முன் பி. ப. 3.30 மணிக்குள் (சாதாரணமாக திங்கட்கிழமை பி. ப. 3.30 மணி.) அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேரவேண்டும்.

அரசாங்க வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபால் பெட்டி இல. 500, கருமாலயம், கொழும்பு, அவர்கட்கு நேரடியாக சேர்ப்பிக்கப்படவேண்டும். அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக் கொள்ளமாட்டார்.

இலங்கை வாழைச்சேனை ஈஸ்ரேண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனுல் உற்பத்தி செய்யப்பட்ட காகிதத்தில்
இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.